ஸ்ரீ:

# இந்திய நாட்டில் இந்துக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளும் அதற்கான தீர்வுகளும்

(The Majority Report என்ற ஆங்கில நூலின் சுருக்கமான தமிழ் மொழிபெயர்ப்பு)

ஆங்கில நூலின் ஆசிரியர்கள்:

**Ram Kumar Ohri, IPS (Retd.) &**
**Jai Prakash Sharma, IPS (Retd.)**

தமிழாக்கம்:

ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ. கிருஷ்ணமாசார்யர் M.A.,
ஆசிரியர்: பாஞ்சஜன்யம் மாத இதழ்

வெளியீடு:

**CARRIED, A unit of SAMARTH trust**
**Post Box No. 7312,**
**Sriniwaspuri, New Delhi - 110065**
**Phone: +91-11-29842070, Fax: +91-11-29842546**

**E - Mail : carried@samarth.co.in**

**website: www.samarthtrust.in**

**ISBN 978-81-925430-1-7 -**
**First Edition, January2014.**

Printed at Sri Ranganachiyar Achagam ,

214, East Uthara Street, Srirangam, Trichy-620 006.

# இந்திய நாட்டில் இந்துக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளும் அதற்கான தீர்வுகளும்

## 1. அறிமுகம்

இந்திய நாட்டில் வாழும் முகம்மதியர்கள் அனைவரும் வறுமைக்கோட்டின் கீழே வாழ்ந்து வருவதாகவும், பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய குடியினராகவும், பல ஆண்டுகளாக அரசியல் வாதிகள் ஒரு மாயத்தோற்றத்தை உண்டுபண்ணி வருகின்றனர். அதில் ஓரளவு வெற்றியும் கண்டுள்ளனர். இதனடியாக அந்தச் சமூகத்தினருக்கு கல்விக் கட்டணத்தில் சலுகைகளும், கடன் உதவிகளும், கல்வி நிலையங்கள் நடத்தி வருவதில் சலுகைகளும், வாரி வழங்கப்பட்டு வருகின்றன.

2006ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9ஆம் நாள் இந்திய பிரதமர் திரு.மன்மோகன்சிங் அவர்கள், நாட்டிலுள்ள அனைத்து வளங்களிலும், முகம்மதியர்களே முன்னுரிமை படைத்தவர்கள் ஆகிறார்கள் என்று முழக்கமிட்டார். சிறுபான்மையினரின் வாக்கு வங்கியை பெறுவதற்கான ஓர் முயற்சியே இந்த முழக்கமாகும். முகம்மதியர்கள், கிறிஸ்தவர்கள், பார்சி இனத்தவர், பௌத்த மதத்தைச் சார்ந்தவர் மற்றும் சீக்கிய சமூகத்தைச் சார்ந்த 20 லட்சம் நபர்களுக்கு கல்வி உதவித்தொகை மத்திய அரசால் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் வறுமைக்கோட்டின் கீழே வாழும் இந்துக்களுக்கு இந்த உதவித்தொகை வழங்கப்படவில்லை. ஆனால் மத்திய அரசின் இந்த நியாயமற்ற போக்கைக் கண்டித்து இந்துமதத் தலைவர் களோ, ஊடகங்களோ, சீர்திருத்த வாதிகள் என்று தம்மை விளம்பரப்படுத்திக் கொள்பவர்களோ இன்னாள் வரை எந்த எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை. லட்சக்கணக்கான இந்துக்கள் குறிப்பாக கிராமப்புறங்களில் வறுமைக்கோட்டின் கீழே இன்றும் வாழ்ந்து வருகிறார்கள்.

புள்ளி விபரங்களின் படி, முகம்மதியர்களைவிட இந்துக்களே கீழ்க்கண்ட துறைகளில் பின்தங்கியுள்ளனர் என்பதைப் புள்ளி விபரங்கள் வெளிப்படுத்துகின்றன.

1. சிசுக்களின் மரணம், 2. இளம் வயதினரின் மரணம், 3. அவயவ ஊனங்களோடு பிறத்தல், 4. அடிப்படை வசதிகள் அற்றத்தன்மை, 5. கல்வி கற்பதில் மிகவும் பின்தங்கிய நிலை.

சச்சார் குழுவின் பரிந்துரைகளின் பேரில் மத அடிப்படையில் சிறுபான்மையினராகத் திகழும் முகம்மதியர் களுக்கும் மற்றைய நான்கு மதப்பிரிவுகளைச் சார்ந்தவர் களுக்கும் 15 அம்ச திட்டமொன்றை பாரதபிரதமர் திரு. மன்மோகன்சிங் அவர்கள் வெளியிட்டுள்ளார். சச்சார் கமிட்டியின் பரிந்துரைகள் ஒருதலைபட்சமானவை. உண்மைக்குப் புறம்பானவை. நாடெங்கும் அறிஞர்கள் சச்சார் கமிட்டியின் பரிந்துரைகள் மேல் விவாதம் நடத்தியுள்ளனர். ஆணித்தரமான தம் கருத்துக்களையும் தெரிவித்துள்ளனர். மேற்குவங்கத்தில் முதல்வர் செல்வி. மம்தா பானர்ஜி 20ஆயிரம் இமாம்களுக்கும், ஆயிரக்கணக்கான Muezzins களுக்கும் அளித்துவந்த ரூ.86 கோடி உதவித்தொகையை இந்திய அரசியல் நிர்ணய சாஸனத்தின்படி செல்லாது என்று கல்கத்தா உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. அரசின் இந்தப் போக்கால் இன்னும் சில ஆண்டுகளில் இந்து சமுதாயம் அழிவைநோக்கிச் செல்லும். இந்துக்கள் மத்திய அரசின் இந்தப் போலி மதச்சார்பின்மையை முறியடிக்க வேண்டும். அதற்கு ஒரே வழி தற்போதைய ஆளுங்கட்சியான காங்கிரஸையும், அதற்குத் துணைபோகும் உதிரிக்கட்சிகளையும் பதவியி லிருந்து இறக்குவதுதான். இந்திய நாட்டில் இந்துக்கள் பொருளாதார அடிமைத்தனத்தில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுடைய பண்பாடு சீரழிக்கப்படுகிறது. இதை ஒவ்வொரு இந்தியனும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

## 1. உலகில் எங்கும் காணமுடியாத ஜனநாயகத்தை இந்திய நாட்டில்தான் காணலாம்.

உலகில் அமைந்துள்ள 195 நாடுகளில் 123 நாடுகள் ஜனநாயகம் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசால் ஆட்சி செய்யப்பட்டு வருகிறது என்று புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் அவற்றிடையே ஆட்சி புரியும் முறையில் வேறுபாடுகள் பல காணப்படுகின்றன. 'ஒவ்வொரு குடிமகனும் உரிய அரசாங்கத்தைத் தேர்ந்தெடுத்து, அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தால் அனைத்துக் குடி மக்களுக்கும் எவ்வித ஏற்றத்தாழ்வுமின்றி நன்மைகள் ஏற்பட வேண்டும்' என்பதே ஜனநாயகம் என்ற சொல்லுக்கு பொருளாகும். பலஆண்டுகள் அடிமைத்தனத்தில் உழன்ற பிறகு, இந்தியா 1947ஆம் ஆண்டு விடுதலைப் பெற்றது. 1950ஆம் ஆண்டு ஜனநாயக முறையைப் பின்பற்றி இந்தியா குடியரசாயிற்று.

38 ஆண்டுகள் காங்கிரஸ் கட்சி தனித்து இந்தியாவை ஆண்டு வந்தது. 65 ஆண்டு ஜனநாயக ஆட்சியில் 38ஆண்டுகள் நேரு குடும்பத்தினரே நாட்டின் பிரதம மந்திரியாக ஆண்டு வந்தனர். 2004ஆம் ஆண்டு தொடங்கி இத்தாலிய நாட்டு சோனியா மைனோ ***(காந்தி என்ற சொல்லே இந்த அம்மையாருக்குத் தகுதியற்ற சொல்லாகும்).*** எவ்வித உரிமையுமின்றி நாட்டை ஆண்டு வருகிறார். ஜனநாயக முறைப்படியான அரசில் எவ்வித பொறுப்பும் வகிக்காமல் ஆட்சி மையத்தில் அமர்ந்து நாட்டை ஆண்டு வருகிறார் சோனியா. மன்மோகன்சிங் என்பவர் சோனியாவால் ஆட்டிப் படைக்கப்படும் 'ஒரு பொம்மை பிரதமந்திரி'. அவரின் ஆட்சி ஒரு பொம்மலாட்ட ஆட்சியே. பொம்மலாட்டக் காட்சிகளில் பொம்மை பேசும், ஆடும், சிரிக்கும், சண்டைபோடும். ஆனால் அவ்வாறு செய்வதற்கு கயிற்றை இயக்கும் சூத்திரதாரி

தேவை. இங்கே அந்த சூத்திரதாரிதான் சோனியா. ஆங்கிலத்தில் கூறவேண்டுமானால், 'Sonia has all the power with zero responsibility while Manmohan Singh has all the responsibility and zero power. This makes the whole cabinet system a farce in as much as no member of the Union Cabinet cares for the Prime Minister".

இந்திய ஜனநாயகம் ஜாதி, இனம், மொழி, மத விசுவாசம் ஆகியவற்றின் அடிப்படையில் இயங்கி வருகிறது. படித்தவர்கள் தேர்தலில் வாக்களிக்க முன்வருவதில்லை. இந்திய ஜனநாயகத்தில் ஒரு வாக்காளரைப் பணத்தையோ, அல்லது மதுவைக் கொடுத்தோ விலைக்கு வாங்கி விடலாம். ஒவ்வொரு இடைத்தேர்தலும் இங்கே ‘குருக்ஷேத்ர போர்’ போல நடைபெறும். சிறுபான்மையினரின் வாக்கு வங்கியைப் பெறுவதற்கு, ஒவ்வொரு அரசியல் கட்சியும் தன்னால் ஆன முயற்சிகளையும், சாகசங்களையும் மேற்கொள்ளும். இலவசங்கள் என்ற பெயரில் ஒவ்வொரு அரசியல் கட்சியும் வாக்காளர்களை தன்வசம் இழுக்க முயற்சிக்கின்றது.

Income Tax Department, Enforcement Directorate. C.B.I. போன்ற அமைப்புகளைக் கொண்டு அரசியல் கட்சிகளை அவ்வப்போது மத்திய அரசாங்கம் அச்சுறுத்தி வருகிறது. நீதிபதிகள் நியமனத்தில் ஊழல் மலிந்துள்ளது. நீதித்துறை வலுவிழந்து காணப்படுகிறது. சென்னை உயர்நீதி மன்றத்தில் பதவியில் அமர்ந்துள்ள ஒரு நீதிபதியே மற்றொரு நீதிபதியிடம் ஒரு வழக்கில் மனு கொடுக்கிறார். இன்ன ஜாதியைச் சேர்ந்த நீதிபதிதான் நியமிக்கப்பட வேண்டுமென்று வழக்குரைஞர்கள் போர்க்கொடியை உயர்த்துகின்றனர். நீதிபதிகள் மீதான பாலியல் தொடர்பான வழக்கு அன்றாடத் தலைப்புச் செய்தியாக வந்து கொண்டிருக்கிறது. நாடெங்கும் ஊழல் மலிந்து காணப்படுகிறது. கோடிக்கணக்கில் ஊழல்

செய்பவர்கள் அனைத்து அரசியல் கட்சிகளிலும் உள்ளனர். இவ்வாறாக இந்திய ஜனநாயகத்தைப் பற்றி நாம் எழுதிக்கொண்டே போகலாம். ஆயினும் முகம்மதியர்களை எப்பாடுபட்டேனும் திருப்தி படுத்துவதில் தற்போதைய மத்திய அரசு எவ்வாறு முயன்று வருகிறது என்பதை இனிக் காண்போம்.

## 2. முகம்மதியர்களுக்கு அடிபணிந்து போகும் காங்கிரஸ் கட்சியின் போக்கு.

முகம்மதியர்களை எப்பாடுபட்டேனும் தன் கட்டுப் பாட்டுக்குள் தங்கவைத்துக்கொள்ள வேண்டும் என்கிற எண்ணத்திலேயே காங்கிரஸ் கட்சி செயல்பட்டு வருகிறது. 1920ஆம் ஆண்டு தொடங்கி, இந்த முயற்சி பல்வேறு பரிணாமங்களைக் கொண்டதாக விளங்குகிறது. மகாத்மா காந்தி தான் தொடங்கிய ஒத்துழையாமை இயக்கத்திற்கு முகம்மதியர் களின் ஆதரவைப் பெறுவதற்காக நகைப்புக்குரிய சில செயல்களில் ஈடுபட்டார்.

**1.** Khilafat கலவரத்தை காந்தி ஆதரித்து அறிக்கை விடுத்தார்.

**2. 1921**ஆம் ஆண்டு கேரளாவில் இந்துக்கள் மீது முகம்மதியர்கள் நடத்திய கொலைவெறியை (Moplahs கலவரத்தை) கண்டித்து அவர் அறிக்கைவிடவில்லை.

**3. 1926**ஆம் ஆண்டு ஆரிய சமாஜத்தைச் சார்ந்த Swami Shradhanandஐ கொலைசெய்த முகம்மதிய மதவெறி யன் அப்துல் ரஷீதை தன் சகோதரர் என்று மகாத்மாகாந்தி கூறினார்.

ஜவஹர்லால் நேருவை தன் அரசியல் வாரிசாக தேர்ந் தெடுத்தார் மகாத்மாகாந்தி. நேருவை "English by education,

Muslim by culture and Hindu by accident" என்று அறிஞர்கள் வர்ணிப்பர். மகாத்மாகாந்தி மற்றும் நேருவின் தலைமையில் இயங்கி வந்த இந்திய தேசிய காங்கிரஸ் Deobandi Ulema of Jamiat-ul Ulema-e-Hind போன்ற தீவிரவாதம் முஸ்லீம் அமைப்புகளோடு நெருங்கி தொடர்பு கொண்டிருந்தது. இந்திய நாட்டின் ஒன்றின்கீழ் மூன்றின் பகுதியைக் கொண்டு பாகிஸ்தான் உருவாக்கப்பட்டபோது, அந்தப் பகுதியிலிருந்த இந்துக்களை இந்திய நாட்டிற்குள் அனுமதிக்கவும், இங்குள்ள முகம்மதியர்களை பாகிஸ்தான் பகுதிக்கு அனுப்பவும் காங்கிரஸ் கட்சி எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. ஜின்னா வுடன் ஆன உடன்படிக்கையின் இது ஒரு முக்கிய 'ஷரத்' ஆகும்.

இந்தியா சுதந்திரம் அடைந்தபிறகு உருவாக்கப்பட்ட ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்த இடதுசாரி கம்யூனிச கொள்கைகளில் பிடிப்புக் கொண்டிருந்த பேராசிரி யர்களால் இந்திய வரலாறு திருத்தி எழுதப்பட்டது. நாட்டில் நிகழ்ந்த முஸ்லீம்களின் படையெடுப்பால் இந்துக்களுக்கு எந்தத் தீங்கும் விளைவிக்கப்படவில்லை, மாறாக நன்மையே விளைந்தது என்பதை வலியுறுத்தும் பாடப்புத்தகங்களும், வரலாற்று நூல்களும் உருவாக்கப்பட்டன.

எந்த நாட்டிலும் இல்லாத ஓர் வழக்கமாக மக்களின் வரிப்பணத்திலிருந்து 'ஹஜ் யாத்திரை' செல்பவர்களுக்கு மான்யம் வழங்கப்பட்டது. 1959ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேருவின் மத்திய அரசாங்கம் இந்த புதிய வழக்கத்தை நடை முறைக்குக் கொண்டு வந்தது. இந்தச் செயல் அரசியல் நிர்ணய சாஸ்திரத்திற்கு முரண்பட்டதாகும். 2012ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் இவ்வாறு செலவழிக்கப்படும் 700 கோடி தொகை ஒரு சிறிய அளவிலானதே என்று தீர்ப்பளித்தது. மற்றொரு தீர்ப்பின் மூலம் இவ்வாறு 'ஹஜ் யாத்திரை'க்கு அளிக்கப்படும்

உதவித்தொகை படிப்படியாக குறைக்கப்பட்டு 2022ஆம் ஆண்டுக்குள் முழுமையாக நிறுத்தப்பட வேண்டும் என்று ஆணையிட்டது.

முகம்மதியர்களின் வாக்குவங்கியை நிலைநிறுத்தி கொள்வதற்காக அந்த அமைப்புகளின் வேண்டுகோளுக் கிணங்க மணமுறிவு பெற்ற முகம்மதியப் பெண்களுக்கு, அவர் களுடைய கணவன்மார்கள் ஜீவனாம்சம் ஏதும் தரவேண்டாம் என்று மத்திய அரசால் சட்டம் இயற்றப்பட்டது. காஷ்மீரி லிருந்து இந்துக்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்ட போது, மத்திய அரசு அந்த மாநில அரசின் செயல்களில் தான் குறுக்கிட இயலாது என்று வாளாய் இருந்தது. இன்று லட்சக்கணக்கான காஷ்மீரைச் சார்ந்த பண்டிட்கள் எனப்படும் இந்துக்கள் இந்திய நாட்டில் ஆங்காங்கே 'அகதிகள்' போல் வாழ்ந்து வருகின்றனர்.

இந்திய நாட்டில் அனைத்துக் குடிமக்களுக்கும் ஒரேமாதிரியான குடியுரிமைச் சட்டம் கிடையாது. முகம்மதியர் களுக்கென தனிகுடியுரிமைச் சட்டம் அமுலில் உள்ளது. அதுவும் அந்த மதத்தைச் சார்ந்த குருமார்கள் சொல்வதே சட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பலதார மணம் முகம்மதியர்களிடையே பெருமளவில் நிலவி வருகிறது. இதனால் நாட்டில் முகம்மதியர்களின் மக்கள் தொகை கூடி வருகிறது. 'நாம் இருவர் நமக்கு ஒருவர்' என்ற பொன்மொழி இந்துக்கள் மீது திணிக்கப்படுகிறது. இதனால் இன்னும் சில ஆண்டுகளில் இந்துக்களின் ஜனத்தொகை 50%க்கும் கீழ்ச் சென்றிடும்.

### 3. உண்மைக்கு மாறான செய்திகளைக் கொண்ட சச்சார் கமிட்டி யின் பரிந்துரைகள்

2004ஆம் ஆண்டில் நடைபெற்ற மக்களவைக்கான

தேர்தலில் எந்தக் கட்சியும் பெரும்பான்மை பலத்தைப் பெற வில்லை. 543 அங்கத்தினர்கள் கொண்ட மக்களவையில் காங்கிரஸின் பலம் 145. ஆகவே, மற்றைய உதிரிக் கட்சிகளான கம்யூனிஸ்டுகள், சமாஜ்வாத் கட்சி, பகுஜன் சமாஜ் கட்சி, தி.மு.க. ஆகியவற்றின் துணையோடு ஆட்சி பீடத்தில் அமர்ந்தது காங்கிரஸ். காங்கிரஸுக்கும் மற்றைய உதிரி கட்சி களுக்கும் சிறுபான்மையினரான முகம்மதியர்களை எப்போதும் அரவணைத்துச் செல்ல வேண்டிய கட்டாயம் இயற்கை யாகவே அமைந்திருந்தது.

**சச்சார் கமிட்டியின் தோற்றம்**

24 முஸ்லீம் அமைப்பைச் சார்ந்த மக்களவை மற்றும் ராஜ்யசபை உறுப்பினர்கள், மூன்று மத்திய அமைச்சரவையில் அங்கம் வகித்து வந்த மந்திரிகள் ஆகியோர் அடங்கிய குழு பிரதம மந்திரியை 2005ஆம் ஆண்டு மார்ச் 9ஆம் நாள் சந்தித்து, சிறு பான்மையினரான முகம்மதியர்களின் சமூக பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டைக் குறித்த ஆய்வினை மேற்கொண் டிட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர். இதன் விளைவாக டெல்லி உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ராஜேந்தர் சச்சார் தலைமையிலான குழு ஒன்று அமைக்கப் பட்டது. இவர் ஆளுங்கட்சிக்கு மிகவும் நெருக்கமானவர். அந்தக் குழுவில் Sayyid Hamid, Dr.T.K. Oomen, M.A. Basith. Dr. Akhtar Majeed, Dr. Rakesh Basant, Dr. Abu Saleh Shariff, Dr. Syed Zafar Mahmood ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். இவ்வாறு ஒரு குழு அமைக்கப்பட்ட பிறகு, 29.1.2006ஆம் நாள் சிறுபான்மையினருக்குகென ஒரு தனி அமைச்சகம் உருவாக்கப்பட்டது. சிறுபான்மையினருடைய நலனைப் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து, அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்த அமைச்சகத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டது. 1993ஆம் ஆண்டு நிறை

**வேற்றப்பட்ட சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட** National Minorities commission சிறுபான்மையினர் நலனுக்கென அமைக் கப்பட்டிருந்த போதிலும், அதைக் கருத்தில் கொள்ளாது சச்சார் கமிஷன் நியமிக்கப்பட்டது ஏன் என்பதை இன்றுவரை மத்தியஅரசு விளக்கம் அளிக்கவில்லை.

மதத்தின் அடிப்படையில் இந்திய குடிமக்கள் வேறுபடுத்தக்கூடாது என்று இந்திய அரசியல் நிர்ணயச் சட்டம் தெளிவாக தெரிவித்துள்ளபோதிலும், சச்சார் கமிட்டி அதிகார வரம்பை மீறிய ஓர் குழுவாகவே கருத்தில் கொள்ளப்படுகிறது. இதில் வேடிக்கை என்னவென்றால் ஒரு ஓய்வுபெற்ற தலைமை நீதிபதி இவ்வாறு ஒரு குழு அமைக்கப்படுவது பார்லிமென்டை அவமதிக்கும் செயலாகும் என்ற அறிவுரையைக்கூட வழங்கவில்லை. 9.12.2006 அன்று திரு.மன்மோகன்சிங் இந்திய நாட்டு வளத்தை அனுபவிப்பதில் சிறுபான்மையினரான முகம்மதியர்களுக்கே முதல் உரிமை யுண்டு என்று பேசியது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் பொதுச் சொத்தான நாட்டுவளமும், வளப்பமும் எப்படி முகம்மதியர்க ளுக்கு மட்டும் முதல் உரிமைபடைத்ததாகக் கொள்ள முடியும்? 80 சதவிகிதம் இந்துக்களைக் கொண்ட இந்திய நாட்டில் அவர்களுக்கு இல்லாத உரிமை முகம்மதியர்களுக்கு மட்டும் எப்படி அமைந்திருக்க முடியும்?

இவ்வாறு இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தை மீறி செயல்படும் மன்மோகன்சிங்கின் பேச்சிற்கு இந்துமதத் தலைவர்களோ, ஊடகங்களோ எந்த எதிர்ப்பையும் இன்றுவரை தெரிவிக்கவில்லை. சச்சார் கமிட்டியில் இடம்பெற்ற ஆறு அங்கத்தினர்களில் நால்வர் முஸ்லீம் இனத்தவர்கள். சச்சார் கமிட்டி என்பது முஸ்லீம்களுக்காக முஸ்லீம்களால் நியமிக்கப் பட்ட ஓர் குழுவாகும். 403 பக்கங்கள் கொண்ட இந்தக் குழுவின்

அறிக்கை 30.11.2006 அன்று மக்களவையில் தாக்கல் செய்யப் பட்டது. இந்த அறிக்கையின் பக்கம் 2இல் கீழ்க்கண்டவாறு அந்தக் குழுவின் தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

"The Muslims the largest minority community constituting 13.4 per cent of the population are seriously lagging behind in terms of the most of the human development indicators".

சச்சார் குழுவின் பரிந்துரையின் பேரில் முஸ்லீம் மக்களுக்கு பல சலுகைகள் அறிவிக்கப்பட்டன. கிறிஸ்தவர்கள், பார்ஸிகள், புத்தமதத்தைச் சார்ந்தவர்கள், சீக்கியர்கள் ஆகியோர் களுக்கும் முஸ்லீம்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் சிறு பான்மையினர்கள் என்ற கணக்கில் வழங்கப்பட்டன. இந்தியாவின் மொத்த ஜனத்தொகையில் கிறிஸ்தவர்கள் 2.3%, சீக்கியர்கள் 1.9%, புத்த மதத்தைச் சார்ந்தவர்கள் 0.8%, இந்தியாவில் பார்ஸிகளின் மொத்த எண்ணிக்கையை 69,601. (Negligible%). மற்றைய சிறுபான்மையினர்கள் தங்களுக் கென்று எந்தச் சலுகையையும் அளித்திட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திடாதபோது, அவர்களுக்கும் அனைத்துச் சலுகைகளும் அரசாங்கத்தால் வழங்கப்பட்டன.

## 4. இந்துக்களின் கடமை என்ன?

ஏமாற்று பேர்வழிகள் வாழ்கின்ற ஓரிடத்தில் உண்மையைப் பேசுபவன் 'புரட்சிக்காரன்' என்று பட்டம் சூட்டப்படுவான். அவனை அனைவரும் நகைப்புக்குரியவ னாகவே கருதுவார்கள். நமது பாரததேசத்தில் இந்துக்கள் மானத்தோடு வாழ இயலவில்லை. அவர்கள் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. நெடுநாட்களாகத் தமது தாயகமாகக் கொண்டிருந்த 'காஷ்மீரி பண்டிட்கள்' வலுக்கட்டாயமாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். இந்து சமுதாயத்தைச்

சார்ந்த பழம்பெரும் குடிமக்களான 'போடோக்கள்' அஸ்ஸாமி லிருந்து முகம்மதியர்களால் விரட்டியடிக்கப்பட்டனர். மதச் சார்பின்மை என்ற போலி வாதத்தை முன்வைத்து இந்துக்களுக் குரிய அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்றன. காஷ்மீர் தொடங்கி கன்னியாகுமரி ஈறாக வாழ்கின்ற இந்துக்கள் பல்வகையிலும் இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர். 20% ஜனத்தொகை கொண்ட சிறுபான்மையினருக்கு அளவுக்குமீறிய சலுகைகள் வழங்கப்படுகின்றன. ஔரங்கசீப் ஆட்சி செய்த காலத்தில் இந்துக்களிடமிருந்து 'ஜஸியா' வரி வசூலிக்கப்பட்டது. அதற்குக் காரணம் அவர்கள் இந்துக்களாய் இருந்ததால் தான்.

2014ஆம் ஆண்டு இந்தியாவில் வாழும் இந்து குடி மக்கள் தமக்கு ஏதும் தெரியாது என்று யாரிடமும் முறையிட முடியாது. ஆறு ஆண்டுகளுக்கு முன்பே அதாவது 9.12.2006ஆம் நாள் பாரதநாட்டுப் பிரதமர் இந்த நாட்டின் வளத்திலும், வளப்பத்திலும் முதலுரிமை படைத்தவர்கள் முஸ்லீம்களே என்று முழக்கமிட்டார். அன்று ஆரம்பம் ஆகியது இந்துக்களின் வீழ்ச்சி. இதன் விளைவாக சச்சார் கமிட்டி நியமிக் கப்பட்டது. சிறுபான்மையினருக்கென தனி அமைச்சகம் உருவாக்கப்பட்டது. 'விலைக்கு வாங்கப்பட்ட' மற்றும் 'விலைக்கு வாங்கப்படாத' ஊடகங்கள் மத்திய அரசாங்கத்தின் இந்த ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளித்து வந்தன. இன்றும் அளித்து வருகின்றன. சச்சார் கமிட்டியின் பரிந்துரைகள், '**இறைவனின் ஆணை போல்**' ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இந்திய குடிமக்கள் அனைவரும் சமம் என்ற நிலை மாறி மத அடிப்படையில் சிறுபான்மையினர் என்று வகைப்படுத்தப் பட்ட முகம்மதியர்கள், கிறிஸ்தவர்கள், பார்ஸி இனத்தைச்

சார்ந்தவர்கள், சீக்கியர்கள், புத்த மதத்தைச் சார்ந்தவர்கள் ஆகியோருக்கு பெருப்பெருத்த பொருளாதாரச் சலுகைகள் அளிக்கப்பட்டன. இந்த சிறுபான்மையினர் இனத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு கல்வி கட்டணத்தில் முழுச்சலுகை அளிக்கப் பட்டு வருகிறது. இந்த கட்டணச் சலுகையைப் பெறுவதற்கு அவர்களுடைய பெற்றோருடைய ஆண்டு வருமானம் ஒரு லட்சத்தை தாண்டி இருக்கக் கூடாது. மற்றும் தகுதித் தேர்வில் 50% மதிப்பெண்கள் பெற்றிருந்தால் போதும், ஆகிய இரு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு முழுக் கட்டணச் சலுகை அளிப்பதில் மத்திய அரசின் பங்களிப்பு 75% மாநில அரசின் பங்களிப்பு 25%. ஆனால் இந்து சமுதாயச் சார்ந்த ஒரு மாணவன் தகுதித் தேர்வில் 100/100 மதிப்பெண் கள் பெற்றிருந்தாலும் அவனுடைய பெற்றோர்கள் வறுமைக் கோட்டின்கீழ் இருந்தாலும், கல்விக் கட்டணத்தில் அவனுக்கு எந்தச் சலுகையும் அளிக்கப்படுவதில்லை. இந்திய நாட்டில் இந்துவாய் பிறந்ததற்காக அவனுக்கு அளிக்கப்படும் தண்டனை இது.

சிறுபான்மையினர் என வகைப்படுத்தப்பட்ட ஐந்து பிரிவுகளைச் சார்ந்த எந்த ஒரு மாணவனும் மெட்ரிக்குலேஷன் தேர்வில் 50% மதிப்பெண்கள் பெற்றிருந்தால், அவனுடைய பெற்றோர்களின் ஆண்டு வருமானம் 2 லட்சத்திற்கு உட்பட்டிருந்தால் அந்த மாணவன் Ph.D. வரை படிப்பதற்கு கல்விக்கட்டண உதவித்தொகை பெருமளவில் அளிக்கப்பட்டு வருகிறது. அதே சமயம் இந்தச் சலுகை ஒரு இந்து சமுதா யத்தைச் சார்ந்த மாணவனுக்கு மறுக்கப்படுகிறது. மதம் மாறிய மாணவனுடைய பெற்றோர்களுக்கும் இந்தச் சலுகை அளிக்கப் படுகிறது. மதமாற்றத்தை ஊக்குவிக்கும் மாபெரும் ஈனச் செயலாகும் இது. **இதற்கு அரசாங்கம் துணைபோவதுதான் விந்தையிலும் விந்தை.**

ஆனால் சிறுபான்மையினர்கள் என்று வகைப்படுத்தப் பட்ட இனத்தவர்களின் Literacy (எழுத்தறிவு) கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளது.

i. Parsis (97.7%), ii. Christians (80.3%), iii. Sikhs (69.4%), iv. Buddhists (72.7%), v. Muslims (59%)

ஆனால் இந்துக்களின் Literacy (எழுத்தறிவு) 65.1% ஆகும். முகம்மதிய இனத்தவரது எழுத்தறிவு சதவிகிதம், இந்துக்களுடைய எழுத்தறிவு சதவிகிதத்தைவிட 7.1% குறைந்து காணப்படுகிறது. இதற்குக் காரணம் பல முகம்மதிய அமைப்புகள் பெண்களை உயர்கல்வி கற்பதற்கு அனுமதிப்ப தில்லை. அதனால்தான் இந்த ஏற்றத்தாழ்வு.

சமுதாய முன்னேற்றம் என்பது அந்தச் சமூகத்தின் Urbanisation (நகர்புற குடியேற்றம்) சதவிகிதத்தைப் பொருத்துக் கணக்கிடப்படுகிறது.

The following data shows the proportion of urbanization among the six major religious groups of India:

a. Parsis 96. 14%, b. Muslims 36%, c. Christians 34%, d. Buddhists 39%, e. Sikhs 26.59% and f. Hindus 26%.

இதன் அடிப்படையில் முகம்மதியர்களின் வளர்ச்சி இந்துக்களின் வளர்ச்சியைவிட அதிக அளவில் அமைந்துள்ளது.

IV. பிறக்கும் குழந்தைகள் மற்றும் இளஞ்சிறார் இறப்பு வீதம்.

URBAN

| | Infant Mortality | Child Mortality(1to5Years) |
|---|---|---|
| Hindus | 44.3 | 54.7 |
| Muslims | 35.5 | 44.8 |
| Christians | 16.3 | 25.5 |
| Sikhs | ------ | ------- |
| Buddhists | ------ | ------- |

RURAL

| | | |
|---|---|---|
| Hindu | 63 | 82.5 |
| Muslim | 60.4 | 82.2 |
| Christians | 54.8 | 67 |
| Sikhs | 46 | 54.3 |
| Buddhists | 46.6 | 63.2 |

**சச்சார் கமிட்டியின் பரிந்துரைகள்:**

சச்சார் கமிட்டியின் பரிந்துரையின் பேரில் கீழ்க்கண்ட சலுகைகள் மத அடிப்படையில் சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இது அரசியல் நிர்ணய சட்ட விதிகளுக்கு முரணானவை.

1. 27.8.2008 தேதியிட்ட மத்திய அரசின் ஆணையின் மூலம் மதஅடிப்படையில் சிறுபான்மையினருக்கு மட்டும் வழங்கப்பட்ட கல்விக்கடனுக்கான வட்டி முழுமையாக மத்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ்வாறு உதவிபெறும்

மாணவனுடைய பெற்றோர்கள் 4.5 லட்சம் ஆண்டு வருமானத்திற்கு மேல் இருக்கக்கூடாது என்றும் விதிக்கப் பட்டது.

2. 2009ஆம் ஆண்டு மத்திய அரசால் நிறுவப்பட்ட மௌலானஆஸாத், கல்வி அறக்கட்டளை மூலம் சிறுபான்மை யினர் என்று அறிவிக்கப்பட்ட ஐந்து இனத்தைச் சார்ந்த மாணவிகளுக்கு ஆண்டு தோறும் 12,000ரூபாய் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு உதவி பெறும் மாணவியின் பெற்றோர்களின் ஆண்டுவருமானம் 1 லட்சத்திற்கு மிகாமலும், அந்த மாணவி 10ஆம் வகுப்பில் 55% மதிப்பெண்ணும் பெற்றிருக்க வேண்டும். ஆனால் இந்து சமுதாயத்தைச் சார்ந்த மாணவிக்கு இந்தச் சலுகை கிடையாது. இந்த அறக்கட்டளையின் சார்பில் Ph.D., வரையிலான மேற் படிப்பை தொடரும் சிறுபான்மையினர் இனத்தைச் சார்ந்த மாணவிகளுக்கான கல்வி கட்டணத்தொகை முழுமையும் உதவித்தொகையாக தரப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

3. சிறுபான்மையினர் இனத்தைச் சார்ந்த மாணவ, மாணவிகள் I.A.S., I.P.S., தேர்வுக்கான பயிற்சிக்கு எந்தக் கட்டணமும் கிடையாது.

4. புதிய தொழில் தொடங்குவதற்கு இந்து சமுதா யத்தைச் சார்ந்த மக்களுக்கு 15%லிருந்து 18%வரை அவர்கள் வாங்கும் கடன் தொகையின்மீது வட்டி வசூலிக்கப்படுகிறது.

மேலும் அவர்கள் பெறும் கடன் தொகையில் Margin Money ஆக 40% வரை செலுத்த வேண்டும். ஆனால் சிறுபான்மையினர் என வகைப்படுத்தப்பட்டவர்கள் வாங்கும் கடன்தொகைக்கு 5% Margin Money அவர்கள் சொந்த பணத்தில் செலுத்தினால் போதும். மீதமுள்ள 35%ஐ National Minority Development Finance Corporation விருந்து 3%

வட்டிக்குப் பெற்றுக் கொள்ளலாம். வங்கிகள் வழங்கும் மீதமுள்ள 60% கடன்மீது சிறுபான்மையினர் என வகைப்படுத் தப்பட்ட இனத்தவர்க்கு இந்துக்கள் செலுத்தும் வட்டியை விட 2% குறைத்து வசூலிக்கப்படும்.

இந்து சமுதாயத்தைச் சார்ந்த மாணவ மாணவிகள் மேற்படிப்பிற்காக வங்கியிலிருந்து பெறப்படும் கடன் தொகைக்கு 14% வட்டி வசூலிக்கப்படுகிறது. ஆனால் சிறுபான்மையினர் என்று வகைப்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மாணவ மாணவிகள் National Minority Development Finance Corporationலிருந்து 3% வட்டிக்கு பெற்றுக் கொள்ளலாம்.

2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் இத்தகைய கடனுதவி வழங்குவதற்கான முதலீடு 74% மத்திய அரசால் உயர்த்தப்பட்டது. 18.12.2007 ஆம் நாள் வெளிவந்த இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் கீழ்க்கண்ட செய்தி வெளிவந்துள்ளது. "Govt declared mega plan outlay for the Muslims - a package of Rs. 3,780 crores for 90 Muslim - dominated districts."

2012 மார்ச் மாதம் அப்போதைய மத்திய நிதி அமைச்சர் தமது வரவு செலவு திட்டத்தின் மக்களவையில் சமர்பித்த போது, சிறுபான்மையினர் இனத்தைச்சார்ந்த பள்ளி மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்குவதற்காக 4.5 கோடி நிதி ஒதுக்கப்படுவதாக தெரிவித்தார். ஆனால் இந்தத் திட்டத்தின் கீழ் இந்து சமுதாயத்தைச் சார்ந்த பள்ளி செல்லும் மாணவிகளுக்கு வழங்கப்பட மாட்டாது என்பது இதன் மூலம் பெறப்படுகிறது.

இவ்வாறு சிறுபான்மையினர் இனத்தைச் சார்ந்த மக்களுக்கு மட்டும் அளிக்கப்படும் சலுகைகளின் முழு

விபரங்களை www.minorityaffairs.gov.in என்ற இணையதள முகவரியில் கண்டு கொள்ளலாம். மேலும் முஸ்லீம் மக்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளைப்பற்றிய மேலும் விபரங்களை Popular Front of India (http://popularfrontofindia.com/pp/story/scholarshipsindianmuslims). என்ற இணையதள முகவரியிலும் கண்டு கொள்ளலாம்.

மத்திய அரசின் இந்தச் சாதனைகளை திரு.சல்மான் குர்ஷித் (Minister for Minority affairs) கீழ்க்கண்டவாறு 29.5.2012 அன்று நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

- During 11th Plan his Ministry awarded 1,42,12,656 minority scholarships as against a target of 93,37,539 minority scholarships.

- In 2011-2012, 51.28 lakh pre-Matric minority scholarships worth Rs. 616.16 crores were awarded as against the target of 34 lakhs.

- In post-matric scholarships, 7.02 lakh scholarships were awarded to minority students as against a target of 5.25 lakhs.

- In Merit-cum Means scholarships, apart from the fixed quota of 20,000 fresh scholarships to minority students, 22,971 renewals of scholarships were done which was an all-time high.

- Under Maulana Azad National Fellowship scheme 755 new scholarships were granted to minority students in 2011-2012 and 1,511 minority scholarships were re-

newed which number was double the number of such scholarships granted during the previous year.

★Under the Free Coaching and Allied Benefits Scheme in the year 2011-2012, Rs. 15.96 crores had been utilized for 7,340 minority candidates out of the allocation of Rs. 16 crores meant for minorities welfare.

★In all 1,42,12,655 scholarships were awarded to minority students at a total cost of Rs. 2,709.55 crores from the tax-payers money (including MAEF scholarships) in a period of five year of 11th plan.

★Under the Areas Development programme the Ministry undertook a scheme for infrastructure development of 90 minority-dominated districts (identified by Justice Sachar in his report).

★Against the 11th Plan allocation of Rs. 2,750 crores, Rs. 2,941,60 crore were spent for building schools, additional class rooms, hostels, particularly girls hostels, ITIs, polytechnics, health centres, etc., in these 90 minority-specific districts. It is common knowledge that at least 10 to 12 of these districts are those which have been overrun by Bangladeshi infiltrators. But that didnot bother either Justice Sachar, or the Minority Affairs Minister, Salman Khurshid.

★Under Economic Empowerment programme, during the 11$^{th}$ Plan period Priority Sector Lending (PSL) by nationalized banks inreased from 10.60 per cent in 2007-2008 to 14.83 per cent. The total PSL provided to minori-

ties upto 31st December, 2011, was Rs.1,54,789.90 crores. The government funded National Minorities Development & Finance Corporation (i.e., NMDFC) disbursed loans totaling Rs. 977.21 crores to 4,67,909 minority beneficiaries.

✸A policy of 4.5 per cent reservations for minority communities in government jobs and admissions was formulated.

✸The corpus of Maulana Azad Education Fund was increased from Rs. 200 crores to 750 crores and the government equity in the National Minority Development and Finance Corporation was increased from Rs. 375 crores to Rs. 875 crores. This 500 crore monetary largesse is being dished out from taxpayers money.

Thus nearly two crore scholarship were bestwed on Muslims and four privileged minorities within 6 years from 2007 to 2012.

1. இதன் விளைவாக இந்திய ஜனத்தொகையில் 20% கொண்ட 5 சிறுபான்மை இனமக்களான முகம்மதியர்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள் மற்றும் பார்ஸிகள் சிறப்புத்தகுதிபெற்ற இனத்தவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். இதன்வழி அவர்களுடைய வாக்கு வங்கியை மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி தன்வசம் தக்கவைத்துக் கொள்ள முயற்சி செய்துள்ளது.

2. நாட்டின் பல்வேறு பகுதிகளில் வாழும் இந்து மதத்தைச் சார்ந்த ஏழை மாணவர்களுக்கு இத்தகைய கல்விக் கடன் தொகையோ அல்லது உதவித்தொகையோ அளிக்கப்

படாமல் அவர்களை மேலும் வறுமைக்கோட்டின் கீழே தள்ளுவதில் முனைப்பைக் காட்டியுள்ளது தற்போதைய மத்திய அரசு.

3. இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள் என்பதால் 80% மக்கள் மூன்றாம்தர குடிமக்களாக தற்பொழுது நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த அவலநிலையை இந்து சமயத்தைச் சார்ந்த மதத் தலைவர்களோ அல்லது சமூக ஆர்வலர்களோ கண்டு கொள்ளவே இல்லை. அண்ணா ஹசாரே தொடங்கி மேதாபட்கர் ஈறான சமூக ஆர்வலர்களோ, இந்துசமயத்தைச் சார்ந்த இனத்தலைவர்களான நிதிஷ்குமார், அகிலேஷ் யாதவ், மம்தாபானர்ஜி, ஸ்ரீஸ்ரீரவிசங்கர், பாபாராம்தேவ், ஐந்து நக்ஷத்திர அந்தஸ்து படைத்த பெருப்பெருத்த மதத்தலைவர்களோ கண்டிக்க முன்வரவில்லை. இந்திய அரசியல் நிர்ணயசட்ட விதிகளுக்கு முரணானது என்று இவர்களில் யாரும் குரல் எழுப்பவில்லை. இதற்குக் காரணம் வாக்குவங்கி அரசியலும், முதுகெலும்பற்ற மதத்தலைவர்களின் போக்குமாகும்.

மதத்தின் அடிப்படையில் மக்களிடையே மக்களைப் பிரிப்பது ஒரு கொடுமையான செயலாகும்.

### 5. இந்துக்களுக்கு எதிரான மாநில அரசுகளின் விபரீதப் போக்குகள்:

முகம்மதியர்களின் வாக்கு வங்கியை பெறுவதில் தாங்கள் எந்த விதத்திலும் மன்மோகன்சிங்கின் தலைமை யிலான மத்தியஅரசுக்கு சளைத்தவர்கள் அல்ல என்பதை 2007ஆம் ஆண்டு பீகார் முதல்வரான சதிஷ்குமார் தாம் அறிவித்த திட்டத்தின் வாயிலாக நிலைநாட்டிக் கொண்டார். அவர் அறிவித்த "Mukhyamantri Alpasankhyaak Vidyarthi

Protasahan Yojana" திட்டத்தின்கீழ் முஸ்லீம், கிறிஸ்தவ, பௌத்த, சீக்கிய, மற்றும் பார்ஸி இனத்தைச் சார்ந்த மாணவ மாணவிகள் அனைவருக்கும் அவர்கள் +2 தேர்வில் தேர்ச்சிப் பெற்றாலே ரூ.10,000 உதவித்தொகை வழங்கப்பட்டது. அதேசமயம் இந்துசமயத்தைச்சார்ந்த மாணவ மாணவிகளுக்கு இது மறுக்கப்பட்டது. பீகார் மாநிலத்தில் வாழும் 8 கோடி இந்துக்களுக்கு இந்தச் சலுகை மறுக்கப்பட்டுள்ளது

உத்தர பிரதேசத்தில் முகம்மதியர்களுடைய வாக்கு வங்கியைப்பெற்று முதலமைச்சரான அகிலேஷ் யாதவ், உத்தர பிரதேசத்தில் வாழும் அனைத்து முகம்மதியப் பெண்களும் +2 தேர்வுக்குப் பிறகு படிப்பை மேற்கொண்டு தொடரவோ, அல்லது திருமணம் செய்து கொள்ளவோ ரூ.30,000 அளிக்கப் படும் என்று அறிவித்தார். ரூ. 250 கோடி இந்தச் செலவினத்திற் காக ஒதுக்கப்பட்டது. பிரோசாபாத் மாவட்டத்தில் மட்டும் 473 இளம்முகம்மதிய பெண்களுக்கு திருமண உதவித்தொகையாக 47.3 லட்ச ரூபாய் வழங்கப்பட்டதாக அகிலேஷ் யாதவ் இன் மந்திரி சபையில் அங்கம் வகிக்கும் முகமது ஆசம்கான் என்பார் தெரிவித்தார். இதன்வழி 17 அல்லது 18 வயதிலேயே முகம்மதியப் பெண்களுக்கு திருமணம் செய்து கொள்பர் களுக்கு அரசாங்கம் ஊக்கத்தொகை அளித்துள்ளது என்பதை அவரே ஒப்புக்கொண்டார். இதில் ஏதும் தவறில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

முகம்மதியர்களுடைய புதைவிடங்களை பராமரிப்பதற் காக உத்தரபிரதேச அரசால் ரூ. 200 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. ஆனால் இந்துக்களுடைய புதைவிடங்களையோ அல்லது எரியூட்டும் இடங்களையோ பராமரிப்பதற்கு எந்த முயற்சியையும் அகிலேஷ் யாதவ் இன் அரசு மேற்கொள்ள வில்லை.

இதேபோன்று மேற்கு வங்கம் மகாராஷ்டிரா மாநில அரசுகளும் முகம்மதியர்களை மட்டுமே திருப்தி படுத்தும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. மேற்கு வங்கத்தில் மம்தா பானர்ஜி அரசு முஸ்லீம் பள்ளிவாசல்களை நிர்வகித்து வரும் இமாம்களுக்கு மாதம் ரூ. 2,500 ஊதியத்தொகையாக அறிவித்துள்ளது. அவ்வாறே மசூதிகளில் பணியாற்றிவரும் Muezzins (whose scriptural duty is to summon the faithful to namaz five times every day. மாதந்தோறும் ரூ. 1000 உதவித்தொகை அறிவிக்கப்பட்டுள்ளது. (ஆயினும் மாநில அரசின் இந்தச்செயல் அரசியல் நிர்ணயச் சட்டத்திற்கு முரணானது என்று கல்கத்தா உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. ஆயினும் மம்தா அரசு இந்த தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யவுள்ளது.

மம்தா அரசு மேலும், 10,000 மதரஸா பள்ளிகளுக்கு அங்கீகாரம் அளித்துள்ளது. இதன்வழி மதபோதனை நடத்தும் மதரஸா பள்ளிகளுக்கு இந்துக்கள் செலுத்தும் வரிப்பணம் செலவிடப்படுகிறது. ஆயிரக்கணக்கான இந்து மதத்தைச் சார்ந்த பூசாரிகள் வறுமைக்கோட்டிற்கு கீழே வாழ்ந்து கொண்டிருக்கும்போது அவர்களுடைய நிதிநிலைமையை உயர்த்துவதற்கு முன்வராத மம்தா அரசு முகம்மதியர்களுக்கே அனைத்துச் சலுகைகளையும் வழங்கி வருகிறது.

மேலும் 9 அல்லது 10ஆம் வகுப்புகளில் பயிலும் முகம்மதிய இனத்தைச் சார்ந்த மாணவிகளுக்கு மட்டுமே சைக்கிள் வழங்கப்படும் என்று மம்தாபானர்ஜி அறிவித்தார். அதேசமயம் இந்து சமயத்தைச் சார்ந்த மாணவிகளுக்கு இது மறுக்கப்படுகிறது.

டில்லி மாநில முதலமைச்சர் ஷீலாதிக்ஷித் சிறுபான்மையினர்கள் என்று மதஅடிப்படையில் பிரிவு செய்யப்பட்ட

தொழில் முனைவோர்க்கு குறைந்த வட்டியில் இதுகாறும் வழங்கப்பட்டு வந்துகொண்டிருந்த 1 லட்சத்தை 5 லட்சமாக உயர்த்தினார். ***(இதன்விளைவை அவர் எதிர்கொண்டுள்ளார். எந்த முஸ்லீம் இனத்தவர்களுக்கு சலுகைகளை அளித்தாரோ அவர்கள் ஷீலாதிக்ஷித்தை பதவியிலிருந்து இறக்கி விட்டார்கள்.)***

மதஅடிப்படையில் இவ்வாறு சலுகைகள் வழங்குவது அரசியல் நிர்ணய சட்டம் விதி 15(1)க்கு முரண்பட்டதாகும். அதன்படி **"The state shall not discriminate against any citizen on grounds only of religin, race, caste, sex, place of birth or any of them".** என்பது தெளிவாக்கப் பட்டுள்ளது.

பல்வேறு புள்ளி விபரங்களின் அடிப்படையில் முகம்ம தியர்களுடைய வாழ்க்கைத் தரம், வருமானம் உயர்ந்துள்ளது என்றும், இறப்பு சதவிகிதம் குறைந்துள்ளது என்றும் தெளிவாகி யுள்ளது. மாநிலஅரசும் மத்திய அரசும் முகம்மதியர்களுக்கு மட்டும் இதுபோன்ற சலுகைகளை அளிப்பதற்கு அவர்கள் வறுமையில் வாடுவதாகவும், அவர்களுடைய பொருளாதார முன்னேற்றத்திற்கு பாடுபடுவதாகவும் கூறிவருகின்றனர். அதே சமயம் கோடிக்கணக்கான இந்துக்கள் வறுமைக்கோட்டின்கீழ் வாழ்ந்து வருவதை ஏன் புறக்கணிக்கிறார்கள். நாட்டினில் உள்ள அனைத்து வளங்களிலும், வளப்பங்களிலும் முகம்மதியர் களுக்கே முதல்உரிமை என்று கூறுவது எவ்வாறு பொருந்தும். 35கோடி இந்துக்கள் வறுமைக்கோட்டின்கீழ் வாழ்வது மன்மோகன் அரசிற்குத் தெரியாதா? இதுதான் மதச்சார் பின்மையா? இந்துக்களே சிந்தியுங்கள்! எதிர்வரும் பொதுத் தேர்தலில் இந்தப்போலி மதச்சார்பின்மையை ஆதரிக்கும் அரசியல் கட்சிகளை தூக்கி எரியுங்கள். அனைத்துக் குடிமக்களையும் ஒரேபார்வையில் பார்க்க முற்படும் அரசியல் கட்சிக்கு ஆதரவு தாருங்கள்.

**நீதியரசர் சச்சார், பாரதநாட்டின் பிரதமராகச் செயல்படும் மன்மோகன்சிங் மற்றும் மத்திய அரசில் சிறுபான்மையினரின் நலன்களைப் பேணுவதற்காக உருவாக்கப்பட்ட அமைச்சர் ஆகியோரை நோக்கித் தொடுக்கப்படும் 16 கேள்விக்கனைகள்.**

1. 1998ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட National Family Health Survey - 2 அறிக்கையின்படி இந்துக்களைவிட முகம்மதியர்கள் சமுதாய முன்னேற்றத்தின் அளவுகோல்களான நான்கு கூறுகளில் நல்ல நிலைமையிலேயே இருந்து வந்தனர் என்பதை சச்சார் கமிட்டி ஏன் கருத்தில் கொள்ளவில்லை. அந்த நான்கு கூறுகளாவன:

1. Infant & Child Mortality, 2. Life Expectancy at Birth, 3. Degree of Urbanisation; and, 4. Literacy.

2. 1998 ஆம் ஆண்டு அரசு வெளியிட்ட அறிக்கையின்படி முகம்மதியர்களுடைய வாழ்நாள் சராசரி வயது 62.6. இந்துக்களுடைய வாழ்நாள் சராசரி 61.4. 2005 - 2006ஆம் ஆண்டு அறிக்கையின்படி முகம்மதியர்களுடைய வாழ்நாள் சராசரி வயது 68. இந்துக்களுடைய வாழ்நாள் சராசரி வயது 65. இதன்படி முகம்மதியர்களுடைய வாழ்நாள் சராசரி வயது 7 ஆண்டுகளில் 5.4 நாளாக உயர்ந்திருக்க இந்துக்களின் வாழ்நாள் சராசரி வயது 3.6 வருடங்களாக மட்டுமே உயர்ந்துள்ளது. ஆகவே இந்த 7 ஆண்டுகளில் முகம்மதியர் களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந் துள்ளது என்பதை இந்தப் புள்ளி விபரமே தெரிவிக்கிறதல்லவா. நீதிபதி சச்சாரும் மத்திய மந்திரி சல்மான் குர்ஷித் உம் வேண்டு மென்றே இந்துக்களை நாடெங்கும் வாழ்ந்து வரும் 80% கொண்ட சமூகத்திற்கு அநீதி இழைத்துள்ளனர்.

3. 2006ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2ஆம் நாள் புதுடில்லியில் பெருமைமிக்க Indian Institute of Public Administration என்ற ஆராய்ச்சி நிறுவனத்தில் முனைவர் சஞ்சய் குமார் (Professor, Centre of Studies for developing Studies, New Delhi) வாசித்தளித்த - 'Social and Economic Status and Popular Perception of Muslims in India'- என்ற ஆராய்ச்சிக் கட்டுரையில் பொருளாதார ரீதியிலோ, கல்வி மேம்பாட்டிலோ இந்தியாவில் முகம்மதியர்களுக்கும் இந்துக்களுக்குமிடையே எந்தவிதமான ஏற்றத்தாழ்வுமில்லை என்று புள்ளி விபரங்களுடன் கொடுக்கப்பட்டுள்ளது.

ஏன் சச்சார் கமிட்டி இந்த ஆய்வுக் கட்டுரையை கருத்தில் கொள்ளவில்லை?.

4. முனைவர் சஞ்சய் குமாரின் ஆய்வுக்கட்டுரையில் ‘பொருளாதார ரீதியில் மிகவும் பிற்பட்டோர்கள்’ முகம்மதியர் களைவிட இந்து சமுதாயத்திலேயே அதிக அளவில் உள்ளனர் என்ற முடிவை ஏன் சச்சார் கமிட்டி கருத்தில் கொள்ளவில்லை?. முனைவர் சஞ்சய் குமாரின் அறிக்கையை குறிப்பிட்டிருக்கும் சச்சார் கமிட்டி ஏன் இந்த மிக முக்கியமான குறிப்பைக் கருத்தில் கொள்ளவில்லை.

5. பல்வேறு புள்ளி விபரங்களின்படி இந்தியாவில் வாழும் முகம்மதியர்களுடைய வாழ்நாள் சராசரி வயது, இந்துக்களின் வாழ்நாள் சராசரி வயதைவிட உயர்ந்திருப்பதை மறைத்து முகம்மதியர்களை நலிவுற்றவர்களாகவும், வறுமைக் கோட்டின் கீழே வாழ்பவர்களாகவும் ஆன ஓர் மாயத் தோற்றத்தினை ஏற்படுத்தியது ஏன்?. இதன்வழி நாட்டில் பெருகிவரும் தீவிரவாதத்திற்கு புத்துயிர் அளித்து இந்துக்களை நலிவுறச் செய்யும் பணியில் சச்சார் கமிட்டி ஈடுபட்டது ஏன்?.

6. பல்வேறு புள்ளிவிபரங்களின்படி Infant Mortality, Child Mortality and Life Expectancy at Birth முகம்மதியர்கள் இந்துக்களைவிட மேம்பட்டநிலையில் இருப்பதாக கூறப்பட்டிருப்பதை ஒப்புக்கொண்ட சச்சார் கமிட்டி இவற்றிற்கு காரணம் முகம்மதியப் பெண்கள் தம் குழந்தைகளுக்கு தாய்ப்பாலை உணவாக ஊட்டுவதாலும், சத்துள்ள உணவுகளை அவர்களின் குழந்தைகளுக்கு கொடுத்து வளர்ப்பதாலும் ஏற்பட்ட நன்மைகள் என்று விளக்கமளிக்க ஏன் முற்படவேண்டும்?. உண்மை நிலையை மறைப்பதற்கான முயற்சியில் ஏன் ஈடுபடுவானேன்?.

7. National Council of Applied Research, New Delhi என்ற ஆராய்ச்சி நிறுவனம் 2007ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளியிட்ட ஆய்வுக் கட்டுரையின் அடிப்படையில் பொருளாதார ரீதியில் இந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்கு மிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இல்லையென்று அறுதியிட்ட பின் முகம்மதியர்களுக்கு மட்டும் பொருளாதார ரீதியில் பின்தங்கியவர்கள் என்று சச்சார் கமிட்டி முடிவு செய்தது ஏன்?.

8. சச்சார் கமிட்டியின் புளுகுகளுக்கு சம்மட்டியால் அடிப்பதுபோல், 2011ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 மற்றும் 25 தேதிகளில் United Nations Development Programme and India's Planning Commission சார்பில் நடைபெற்ற கருத்தரங்கில் புதுடில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக பேராசிரியர்கள் Sukhdeo Thorat and Amaresh Pandey ஆகியோர்கள் வாசித்தளித்த ஆய்வுக் கட்டுரையில் முகம்மதியர்களுடைய ஏழ்மைநிலை 2004 - 2005 ஆம் ஆண்டுகளில் இருந்ததைவிட 2009 - 2010ஆம் ஆண்டுகளில் 7.6% குறைந்து காணப்படுகிறது என்றும், மற்றைய சிறுபான்மை சமூகத்தினரின் ஏழ்மைநிலை 7.2%

குறைந்து காணப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளனர். அதே சமயம் இந்துக்களின் ஏழ்மைநிலை 4.5% தான் குறைந்துள்ளது என்பதையும் தெரிவித்துள்ளனர். மேலும் இந்த அறிக்கையின் படி முகம்மதியர்களுடைய வாழ்நாள் சராசரி வயது உயர்ந்துள் ளதாகவும் தெரிவித்துள்ளனர். இதன் அடிப்படையில் இந்துக்களே நலிவுற்ற சமுதாயத்தினராக கொள்ளப்பட வேண்டும் அல்லவா?.

9. சச்சார் கமிட்டி அறிக்கையின்படி 2001ஆம் ஆண்டு ஜனத்தொகை கணக்கெடுப்பின்படி கீழ்க்கண்ட மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிக்கு உட்பட்ட பகுதி களில் இந்துக்களைவிட முகம்மதியர்கள் அதிக அளவில் கல்வி அறிவு பெற்றவர்களாய் விளங்கி வருகின்றனர் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

1. Gujarat, 2 . Andhra Pradesh, 3. Karnataka, 4. Tamil Nadu, 5. Maharashtra, 6. Madhya Pradesh, 7. Odisha, 8. Dadra & Nagar Haveli, 9. Puducherry, 10. Andaman & Nicobar Islands என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நிலைமை அவ்வாறு இருக்க லட்சக்கணக்கான முகம்மதியர் களுக்கு மட்டும் வட்டியில்லாத கடன்தொகையும், ஆராய்ச்சி படிப்புகளுக்கான கல்வி உதவித்தொகையும் அளிப்பதற்கு முற்பட்டது ஏன்?.

10. கீழ்க்கண்ட மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் வாழும் இந்து சமுதாயத்தைச் சார்ந்த பெண்களுடைய கல்வி மேம்பாடு மற்றும் கல்வி கற்கும் திறன், முகம்மதியப் சமுதாயத்தைச் சார்ந்த பெண்களுடைய கல்வி மேம்பாடு மற்றும் கல்வி கற்கும் திறனைவிட தாழ்வுற்ற நிலையிலேயே அமைந்துள்ளது.

1. Jharkhand, 2. Odisha, 3. Chhatisgarh, 4. Madhya Pradesh, 5.Gujarat, 6. Maharashtra, 7. Andhra Pradesh, 8. Karnataka, 9. Tamil Nadu, 10. Puducherry, 11. Andaman & Nicobar Inslands, 12. Daman & Diu, 13. Dadra & Nagar Haveli.

ஆனால் இந்த 13 பகுதிகளில் உள்ள முகம்மதிய சமுதாயத்தைச் சார்ந்த பெண்களுக்கு மட்டும் கல்வி உதவித் தொகை அளிக்கப்பட்டு, தாழ்வுற்ற நிலையில் விளங்கும் இந்து சமுதாயத்தைச் சார்ந்த பெண்களுக்கு கல்வி உதவித் தொகையோ அல்லது குறைந்த வட்டியில் கல்வி கடன் தொகையோ மறுக்கப்படுவது ஏன்?. இதற்கு சச்சார் கமிட்டியின் அங்கத்தினர்களோ அல்லது சிறுபான்மையினர் நலனைப் பாதுகாப்பதற்காக ஏற்பட்ட அமைச்சகமோ பதில் அளிக்க முன்வருவார்களா?.

11. மக்களவையில் 2011ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24ஆம் நாள் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றிற்கு அப்போதைய Minister of State for Minority Affairs, Vincent H. Pala அவர்கள், மத்திய அரசிடம் மத அடிப்படையிலான சிறுபான்மையினர் என்று வகைப்படுத்தப்பட்டோருடைய வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மக்களைப்பற்றிய புள்ளி விபரங்கள் ஏதும் இல்லையென்று பதிலளித்துள்ளார். 2011ஆம் ஆண்டு புள்ளி விபரங்கள் அற்ற நிலையில் 2007ஆம் ஆண்டு சிறுபான்மையினர் நலனைப் பாதுகாப்பதற்காக அமைக்கப் பட்ட அமைச்சகம் மற்றும் சச்சார் கமிட்டி எதன் அடிப்படையில் இந்திய நாட்டில் வாழும் முகம்மதியர்கள் வறுமைக்கோட்டின் கீழே தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற முடிவிற்கு வந்தது. இந்தக் கேள்விகளுக்கு யார் பதில் அளிப்பார்கள்?.

12. திரு. சல்மான் குர்ஷித்தும், National Advisory Councilலும் எந்த இந்திய அரசியல் நிர்ணயச் சட்ட விதிகளின் கீழ் அனைத்து பொருளாதார ரீதியில் நலிவுற்ற இந்து சமுதாய மக்களை ஒதுக்கி விட்டு வாழ்க்கைத் தரத்தில் மேம்பட்டு விளங்குகின்ற 5% ஜனத்தொகையைக் கொண்ட முகம்மதியர்கள், கிறிஸ்தவர்கள், பார்ஸிகள், சீக்கியர்கள், பௌத்தர்கள் ஆகியோருக்கு 20 லட்சம் Scholarship வழங்கு வதற்கு முற்பட்டனர் என்பது குறித்து மத்திய அரசு விளக்கம் அளிக்க வேண்டும்.

13. 2012ஆம் ஆண்டு மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் 9ஆம் வகுப்பிற்கு மேல் படிப்பைத் தொடரும் முகம்மதியர்கள், கிறிஸ்தவர்கள், பார்ஸிகள், சீக்கியர்கள், பௌத்த மதத்தைச் சார்ந்த மாணவிகளுக்கு மட்டும் சைக்கிள் வழங்குவதற்காக 5கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. பொருளாதார ரீதியில் பின் தங்கிய நிலையில் இந்து மதத்தைச் சார்ந்த மாணவிகளுக்கு இது அகில இந்திய ரீதியில் மறுக்கப் பட்டுள்ளது. இந்துக்களுடைய வரிப்பணத்தில் முகம்மதிய மற்றும் மத அடிப்படையில் சிறுபான்மையினர் இன மாணவிகளுக்கு மட்டும் சலுகையா?.

14. National Advisory Council -இன் பரிந்துரைப்படி முகம்மதியர்கள், கிறிஸ்தவர்கள், பார்ஸிகள், சீக்கியர்கள், பௌத்த மதத்தைச் சார்ந்தோர் ஆகியோருக்கு மேலைநாடு களில் உயர்கல்வி பயிலுவதற்காக மிகக்குறைந்த வட்டியில் கல்விக் கடன்தொகை வழங்கப்படுகிறது. அதே சமயம் இந்து சமயத்தைச் சார்ந்தோர்க்கு இந்த உரிமை மறுக்கப்படுகிறது. ஏன் இந்த ஏற்றத்தாழ்வு?

15. 2013ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6ஆம் நாள் புதுடில்லியிலிருந்து வெளிவரும் The Pioneer நாளிதழில் வெளிவந்த விளம்பரத்தின்படி மேற்குறிப்பிடப்பட்ட 5 மத அடிப்படையிலான சிறுபான்மையினருக்கு Nai Rahat என்ற திட்டத்தின்கீழ் அரசாங்கச் செலவில் Training in Leadership development அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அனைத்து மக்கள் செலுத்தும் வரிப்பணத்தில் குறிப்பிட்ட 5 சமூகத்தினருக்கு மட்டும் இதுபோன்ற பயிற்சி அளிப்பது எந்த வகையில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகும்.

16. மத்திய அமைச்சர் சல்மான் குர்ஷித்தும், National Advisory Councilலும் எந்த இந்திய அரசியல் நிர்ணயச் சட்ட விதியின்கீழ் 5 குறிப்பிட்ட மத அடிப்படையிலான சமூகத் தினருக்கு மட்டும் இத்துனை சலுகைகள் வழங்க முடியும் என்பதையும் பெரும்பான்மை சமூகத்தைச் சார்ந்த அதே சமயத்தில் வறுமைக்கோட்டின் கீழ்வாழும் மக்களுக்கு இந்தச் சலுகைகள் ஏன் அளிக்கப்படவில்லை என்பதும் தெளிவுபடுத்த முன்வருவார்களா?

உறங்கிக் கொண்டிருக்கும் இந்து சமுதாயமே உங்கள் நலனைப் பாதுகாக்க வேண்டிய சமூக ஆர்வலர்களும், மடாதி பதிகளும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள். உங்கள் இன மக்கள் கல்வி முன்னேற்றத்தை அடையவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கும் சோனியாவின் போலி மதச்சார்பின்மை அரசை தூக்கி எறியுங்கள். ஐந்து குறிப்பிட்ட மதங்களைச் சார்ந்த சமுதாயத்தினர் மட்டும் நீங்கள் செலுத்தும் வரிப்பணத்தில் அனைத்துச் சலுகைகளையும் எவ்வாறு பெற்றுக் கொள்ள முடியும்? உங்கள் வரிப்பணத்தில் அவர்களுக்கு ஊட்டச்சத்து அளித்திடும் வாக்குவங்கி அரசியலுக்கு முற்றுப்புள்ளி அளியுங்கள். உறக்கத்திலிருந்து விழித்தெழுங்கள்!.

## 6. இனி என்ன செய்ய வேண்டும்; இந்துக்களின் தற்போதைய கடமை என்ன?

வாக்குவங்கி அரசியலைக் கருத்தில் கொண்டு இந்துக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு நாம் ஓர் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இந்தியாவின் ஜனத்தொகையில் 80.5% இந்துக்களாவர், (2001ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனத்தொகை கணக்கெடுப்பின்படி). இவர்கள் அனைவர்க்கும் இன்று மதத்தின் பெயரால் பல சலுகைகள் மறுக்கப்படுகின்றன. 2 கோடிக்கும் மேற்பட்டதான பல்வேறு கல்விக்கடன் உதவித் தொகைகளும், கல்வி சார்ந்த சலுகைகளும், தொழில் தொடங்குவதற்கான ஊக்கத் தொகைகளும் இந்துக்களுக்கு மறுக்கப்படுகின்றன. திட்டக் கமிஷனால் ஏற்றுக்கொள்ளப் பட்ட டெண்டுல்கர் கமிட்டியின் அறிக்கையின்படி 37.2% இந்துக்கள் வறுமைக்கோட்டின்கீழே வாழ்ந்து வருகிறார்கள். பொருளாதார ரீதியில் பின்தங்கியவர்கள். இதன் அடிப்படையில் 35 கோடி இந்து சமயத்தைச் சார்ந்த மக்களுக்கு கல்விக்கடன் உதவித் தொகைகளோ, கல்வி சார்ந்த சலுகைகளோ, தொழில் தொடங்குவதற்கான ஊக்கத் தொகைகளோ அளிக்கப் படுவதில்லை. 20 லட்சம் Scholarship மதஅடிப்படையிலான 5 வகை சிறுபான்மையினருக்கு அளிக்கப்படும்போது, ஒரு Scholarship கூட இந்துக்களுக்கு அளிக்கப்படுவதில்லை.

குறைந்த வட்டியிலான கல்விக் கடன் உதவித் தொகையும் அளிக்கப்படுவதில்லை. மதஅடிப்படையிலான இந்த முன்னுரிமை இந்திய அரசியல் நிர்ணயச் சட்டவிதி களுக்கு முரணானவை. போலி மதச்சார்பின்மையின் அடிப் படையில் இந்துக்கள் நசுக்கப்பட்டு வருகின்றனர். இந்தக் கொள்கையினால் பாதிக்கப்படுவோர் கிராமப் பகுதிகளில் வாழ்ந்து வரும் வறுமைக் கோட்டின் கீழேயான இந்து மக்களே யாவர். இவர்களுக்கென்று தனி வாக்குவங்கி இல்லை. எந்த

அரசியல் கட்சித் தலைவரோ அல்லது 5 நட்சத்திர அந்தஸ்து படைத்த மடாதிபதிகளோ அல்லது ஊடகங்களோ இவர்களுக்கு குரல் கொடுக்க முன்வருவதில்லை. அதே நேரத்தில் மத அடிப்படை யிலான சிறுபான்மையினருக்கு (முகம்மதியர்கள், கிறிஸ்தவர் கள், பார்ஸிகள், சீக்கியர்கள், பௌத்தர்கள்) ஆகியோருக்கு அளிக்கப்படும் சலுகைகள் விளம்பரப்படுத்தப் படுகின்றன. மத்திய அரசின் திட்டங்களாக பறை சாற்றப்படுகின்றன. ஊடகங்களில் அதாவது செய்தித்தாள் களிலும் முழுபக்க விளம்பரங்களாக Educational Empowerment Minorities என்ற தலைப்பில் வெளிவந்துள்ளன.

இத்தகைய சூழ்நிலையில் இந்துக்களுக்கு இரண்டு வழிகள்தான் உள்ளன.

1. இவற்றைப்பற்றி எந்த சிந்தனையும் கொள்ளாமல் 'எல்லாமல் இறைவன்விட்ட வழி', 'நாம் செய்வதற்கு ஒன்றும் இல்லை', 'நடப்பது நடக்கட்டும்', 'நம்மால் என்ன செய்ய முடியும்' என்று கூறிக்கொண்டு ஏதும் செய்யாமல் இருப்பது. ***(இதைத் தான் நாம் செய்து கொண்டிருக்கிறோம். அன்று ஆங்கிலேயன் நம்மை அடிமைப்படுத்தினான். பிரித்தாளும் சூழ்ச்சியைக் கொண்டு தற்போதைய ஜனநாயக 'மதச்சார்பற்ற' அரசியல் கட்சிகள் சமூக நீதி என்ற பெயரில் சிறுபான்மை யினருக்கு வால் பிடிக்கும் செயலைச் செய்து கொண்டிருக் கின்றனர்.)***

2. இதற்கு மாறாக நம்மிடையே ஒளிந்து கொண்டி ருக்கும் மாபெரும் சக்தியை ஒரு முகமாக்கி இந்து சமூகத்தின் எதிர்காலத்திற்குப் போராட வேண்டும். பல நூற்றாண்டுகளாக லட்சக்கணக்கான இந்துக்களை முகம்மதியர்களின் படையெ டுப்பின்போது பலிகொடுத்துள்ளோம். இந்துவாய் பிறந்த தற்காக 'ஜஸியாவரி' செலுத்தியுள்ளோம். ஆங்கிலேயர் களுடைய குள்ளநரித்தந்திரத்திற்கு பலியாகியுள்ளோம்.

பிரித்தாளும் சூழ்ச்சி என்னும் வலையில் அகப்பட்டு இந்தியாவை துண்டாட ஒப்புக் கொண்டோம். பிரிவினையின் போது லட்சக்கணக்கான இந்து மக்களை முகம்மதியர்கள் கொன்று குவித்தபோது, அமைதி காத்துக்கொண்டிருந்தோம். ‘ஜிகாத்’ என்ற பெயரில் முகம்மதி யர்கள் எகிப்திய, பெர்ஷிய நாகரீகங்களை அழித்தனர். வடஆப்ரிக்காவின் பெரும்பகுதி களைக் கைப்பற்றி அவர்களை அங்கு வாழ்ந்து வந்த மக்களை கட்டாயமாக மதமாற்றம் செய்தனர். கிழக்கு ஐரோப்பா மற்றும் ஐபீரியன்பெனின்சுலா நாடுகளில் ஆதிக்கம் செலுத்தி, அவற்றை தங்கள் வசம் வைத்துள்ளனர். இந்தியாவில் 500 ஆண்டுகள் முகம்மதியர்கள் பல முயற்சிகளை மேற்கொண்டு வந்த போதிலும் இந்துக்கள் தமது பண்பாட்டையும் நாகரீகத்தையும் காத்து வந்தனர்.

இந்து மக்கள் தற்போதைய மாற்றங்களை எதிர்த்துப் போராட வேண்டும். சட்ட ரீதியிலான தீர்வுகளைப் புள்ளி விபரங்களின் அடிப்படையில் காண வேண்டும். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழும், நீதிமன்றங்களின் வாயி லாகவும் போலி மதச்சார்பின்மை பேசும் அரசியல் வாதிகளின் கபட நாடகத்தை ஊர் அறியச் செய்யவேண்டும். மத்திய மற்றும் மாநில அரசுகளின் பொறுப்பற்ற செயல்களை மக்களிடையே எடுத்துக்கூற வேண்டும், [உதாரணத்திற்கு மேற்கு வங்கத்தில் மம்தா அரசின் பொறுப்பற்ற செயலை (முஸ்லீம் முல்லாக்களுக்கு அரசின் வரிப் பணத்தில் உதவித்தொகை வழங்கிய செயல்) கல்கத்தா உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து வெற்றி பெற்றுள்ளனர் சில இந்து அமைப்புக்கள்.]

இந்து அமைப்புக்களுக்கிடையே ஒற்றுமையில்லை. இந்து மக்களை பாதிக்கக்கூடிய நடவடிக்கைகளை எதிர்த்துக் குரல் கொடுப்பதில்லை. மக்களிடையே விழிப்புணர்ச்சி

ஏற்படுத்துவதில்லை. அவரவர்கள் தத்தம் வளர்ச்சிக்கோ அல்லது புகழுக்கோ தான் ஒரு செயலைச் செய்ய முற்படுகி றார்களேயொழிய சமூகத்தைப் பாதிக்கும் செயல்களை எதிர்த்துக் குரல் கொடுப்பதில்லை. 5 நட்சத்திர அந்தஸ்து கொண்ட மதத்தலைவர்கள் மதம் சார்ந்த செயல்களில் அரசு குறுக்கிடும்போது வாய் திறப்பதில்லை. ஊடகங்களில் இந்து மக்களுடைய பண்பாட்டையும் பழக்க வழக்கங்களையும் கேலி செய்திடும்போது யாரும் கண்டுகொள்வதில்லை. திருப்பதி யில் முகம்மதியர்கள் தமக்கென, இந்துக்களுக்குச் சொந்தமான கோயில் நிலத்தில் விதிகளைமீறி 14 அடுக்கு பல்கலைக்கழக கட்டடம் எழுப்பிய நிலையில் ஏதோ சில இந்து அமைப்புக்கள் தான் போராடி வருகின்றன. ஆனால் இது நாடு தழுவிய போராட்டமாக அமைந்திருக்க வேண்டும். சுயநலம் ஒன்றையே தம் வாழ்வின் குறிக்கோளாய் கொண்டுள்ள பெரும்பாலான இந்துக்களுக்குப் பொதுநலம் என்றால் என்ன என்றே தெரியாது. தான் வாழ்ந்தால் போதும் என்ற நினைவு கொண்டோர்க்கு சமுதாய நலனில் அக்கறை ஏற்படுவதும் இல்லை. அதைப் பற்றிய சிந்தனையும் எழுவதும் இல்லை.

மத்திய அரசின் ஒரு தலைப்பட்சமான இந்துக்களுக்கு எதிரான திட்டங்களின் விளைவுகளைப்பற்றி யாரும் மக்களுக்கு எடுத்துச் சொல்வதில்லை. எந்த விதமான உரிமை யும் இன்றி குறிப்பிட்ட சில சமூகத்தினர் இந்திய அரசின் வரிப் பணத்தில் பல சலுகைகளை அனுபவித்து வருகின்றனர். 80.5% இந்து மக்கள் செலுத்தும் வரிப்பணத்தில் ஒரு பகுதிகூட அவர்களுடைய நன்மைக்கோ அல்லது கல்வி மேம்பாட்டிற்கோ செலவிடப்படுவதில்லை. மாறாகப் பொருளாதார ரீதியில் முன்னேற்றம் அடைந்துள்ள மத சிறுபான்மையினருக்கு வாக்கு வங்கியை கருத்தில் கொண்டு பல சலுகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதை எதிர்த்து இந்துக்கள் போராட வேண்டும். இல்லையேல் இந்துக்கள் இந்தியாவில் தற்போதைய மூன்றாம்

தரக்குடிமக்கள் என்ற நிலையிலிருந்து, நான்காம் தர குடி மக்களாக ஆக்கப்படுவர். இன்று வாழ்வோருடைய வாழ்நாள் ஒருசில ஆண்டுகளே. எதிர்காலச் சந்ததியினர் வாழ வேண்டு மானால் மத்திய அரசின் இந்த மாற்றுத்தாய் மனப்பான்மை ஒழிக்கப்பட வேண்டும்.

இந்த உண்மைகளை தற்போது கல்வி பயிலும் இந்து சமயத்தைச் சார்ந்த மாணவர்கள் இதை அறிந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைப் புரிந்து கொள்ள வேண்டும். வேலை தேடி அலையும் வாலிபர்களே! நீங்கள் தொழில் தொடங்க குறைந்த வட்டியில் கடன் உதவி தர மறுக்கும் வங்கிகள் சிறுபான்மையினருக்கு மதத்தின் அடிப்படையில் கடன் உதவிகளை வழங்குகின்றன. அத்தகையோருக்குக் குறைந்த வட்டியில் கடன்உதவி பெறுவதற்கு மத்திய அரசு பல ஏற்பாடுகளைச் செய்துள்ளது. அனைத்துத் தரப்பு மக்களும் செலுத்தும் வரிப்பணத்தில் மதச் சிறுபான்மையினர் என்ற போர்வையில் ஒரு சிறு கூட்டம் வாக்கு வங்கி அரசியலை மையமாய்க் கொண்டு பலன்களை அனுபவித்து வருகிறது. இதை எதிர்த்து ஒரு புரட்சி வெடிக்க வேண்டும். இல்லையேல் எதிர்காலத்தில் நீங்கள் காணாமல் போய்விடுவீர்கள். இந்தியா ‘பாகிஸ்தானின்’ ஒரு கிளையாக மாறிவிடும்.

ஒவ்வொரு இந்துவும் தன் சமயத்தைச் சார்ந்த மக்களை நல்ல நிலையில் வாழ்ந்திட தன்னாலான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அத்தகையயொரு முயற்சிதான் மத்திய அரசாங்கத்தின் இந்த முறையற்ற செயலை வெளிப் படுத்துவதும், அதற்கான தீர்வும் ஆகும்.

**ஜெய்ஹிந்த்! ஜெய்ஹிந்த்!! ஜெய்ஹிந்த்!!!**

**வாழ்க வளர்க இந்துக்களிடையேயான**

**ஒற்றுமை உணர்வு!**

★★★